Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 189/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW12 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

Name – தங்கராஜ்

Father's Name –

Village --

Taluk --

Caste --

Calling --

Religion --

Age --

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 26th June 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed.

**முதல் விசாரணை** :

நான் தற்போது திருநெல்வேலி மாநகர பாளையங்கோட்டையில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2017ம் வருடம் பொள்ளாச்சி வட்டார ஆய்வாளராக பணியில்இருந்தபோது, காவல் நிலையக்குற்ற எண். 63/2011, இதச பிரிவுகள் 288, 337, 304A ன் கீழ் வழக்கு பதிவு செய்து, எனது விசாரணைக்கு வைக்கப்பட்டிருந்ததை நான் 13.04.2014ம் தேதி புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடமான யூனிகாஸ்ட் பிரவேட் லிமிடெட், குள்ளக்காபாளையம், பொள்ளாச்சி என்ற இடத்தை 7 மணி சுமாருக்கு சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன்.

பின்னர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் இறந்துபோன பிரதீஷ், த/பெ. விஜயன் என்பவரின் பிரேதத்தினை பொள்ளாச்சி அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் இறப்பு குறித்து பிரேத விசாரணை செய்தேன். பிரேத விசாரரணை முடித்து வேண்டுக்கோள் கடிதத்துடன் பிரேத பரிசோதனைக்காக காவலர் மூலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன்.

இவ்வழக்கில் காயம்பட்ட முரளிதரன் என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று, காயச்சான்றிதழும் பெற்றுள்ளேன். பின்னர் இவ்வழக்கில் இறந்துபோன நபரின் பிரேதத்தினை பரிசோதனை செய்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலமும், பிரேத பரிசோதனை அறிக்கையும் பெற்றேன்.

அன்றைய தினமே எதிரி பாஸ்கர் என்பவரை கைது செய்து, பிணையில் விடுவித்தேன். இவ்வழக்கின் எதிரி சிவக்குமார் என்பவரை விசாரித்த வகையில் அவருக்கு இந்த வழக்கில் சம்பந்தம் இல்லை என்பதால் இவ்வழக்கில் இருந்து அவரை நீக்கி அறிக்கை சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் அறிக்கையினை தாக்கல் செய்தேன்.

அன்றைய தினம் எதிரிக்கும், சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கும் போடப்பட்ட ஒப்பந்தத்தினை பெற்று, நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

இவ்வழக்கின் இதச பிரிவுகள் 288, 337, 304A லிருந்து இதச பிரிவுகள் 288, 338, 304A ஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** ஆகவும், பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.5** ஆகவும், பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.6** ஆகவும், முரளிதரனின் காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.7** ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.8** ஆகவும் குறியிடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞருக்கு குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/. Thiru. E. Pragasam B.A.,B.L.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.